Registered as a News paper in Cevlon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
தொ. 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 90

வைகாசி மீ திங்கள் 28 ரபீஉல் 25 புதன்கிழமை (10-5-72)

11 MAY 1972

பிரகாசமான - தூய்மை
வெண்மை தருவது!

எங்கும் கிடைக்கும்

"தமிழ்மொழி விசேஷ விதிகளை ஏற்கவில்லை; இனியும் ஏற்கார்!

ஆனால் அரசகரும மொழி அமுலில் நியாயம் கிடைக்கும்"

அரசியல் நிர்ணய சபையில் அமைச்சர் கொல்வின்

கோட்டை, செவ்வாயி

1958-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி (விசேஷவிதிகள்) சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விசேஷ விதிகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் எதிர்காலத்திலும் இதில் மாற்றமிருக்க மாட்டாதென்றும் அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இன்று அரசியல் நிர்ணயசபையில் தெரிவித்தார். அரசகரும மொழி விஷயத்தில் எவருக்கும் அநீதி இழைக்கப்பட மாட்டாதென்றும் அமைச்சர் கொல்வின் உறுதியளித்தார்.

நிறுத்தப்பட்ட நகல் அரசியல் திட்டம் பற்றி அரசியல் நிர்ணயசபை இன்று தொடர்ந்த ஆராய்ந்தது. நகல் திட்டத்தில் மூன்றாவது அத்தியாயம் அரசகரும மொழி பற்றி இன்று பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். இன்றும் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள் சபைக்கு வரவில்லை.

அரசாங்கத்தரப்பு இழுக்கேற்படுத்தும் நோக்கத்துடன் இவ்விவாதத்தில் கலந்துகொண்ட சிலர் பேசியதாகவும், அரசகருமமொழி நியாயமான முறையில் செயற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறினார்.

இலங்கை குடியரசாகும் மே மாதம் 22ந் திகதிக்குப் பின்னர் புதிய சபையில் கொண்டுவரப்படும் சகல மசோதாக்களும் பிரதானங்களும் சிங்கள மொழியிலேயே இருக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

அரசகரும மொழி பற்றிய அம்சத்தையும் சபை ஏற்றுக்கொண்டது.

நிக்ஸனின் செயலால் மூன்றாவது உலக யுத்தமா?

நியூயோர்க், மே 9

அமெரிக்க அதிபர் நிக்ஸனின் உத்தரவைத் தொடர்ந்து வட வியட்நாம் துறைமுகங்களிக் கடற்கண்ணி வெடிகளைப் போடும் வேலைகளில் அமெரிக்கக் கடற்படை விமானங்கள் இன்று ஈடுபட்டன. ஹைப்போங் துறைமுகத்திற் முதன்முதலாகக் கண்ணி வெடிகள் வீசப்பட்டன.

அமெரிக்க அதிபரின் இந்த நடவடிக்கையை "அப்பட்டமான ஆக்கிரமிப்புச் செயல்" என்று சோவியத் யூனியன் கண்டனம் தெரிவித்திருக்கிறது:

வட வியட்நாம் அரசாங்கமும், சீன அரசாங்கமும் இதுவரை உத்தியோகபூர்வமாக எதுவும் தெரிவிக்கவில்லை. ஆயினும் வட வியட்நாம் அரசாங்கம், வியட்நாம் விடுதலை முன்னணியான

[5-ம் பக்கம் பார்க்க]

விமானத்தைக் கடத்தியவர்கள் கொலை

டெல்அவிவ், மே. 9

இஸ்ரேலியர்களைப் பதிலைவத்தான நூறு அரபுக் கொரில்லாக்களையும் விடுதலை செய்யாவிட்டால் தாங்கள் நிலை திடுப்பிக் கடத்தியுள்ள நூறு பிரயாணிகளைக் கொண்ட விமானத்தை வெடிவைத்துத் தகர்க்கப் போவதாகப் பயமுறுத்திய மூன்று அரபுக் கொரில்லாக்களும் கொல்லப்பட்டு விட்டதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. விமானத்தை வெடிவைத்துத் தகர்க்கும் பயமுறுத்தலுக்கு இடமளிக்காமல் இப் பிரச்னையை இஸ்ரேலியர்கள் தீர்த்துவைப்பு மந்திரி மோஷே தயான் கையாண்டார்.

குடியரசு தினத்தில் கலைவிழா, கண்காட்சி

கோட்டை, செவ்.

இம்மாதம் 22-ம் திகதி இலங்கை குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்படுவதையொட்டி அன்றைய தினம் கொழும்பு நகரில் கலைவிழாவுக்கும் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்காட்சியில் தேசிய கலைகள் இடம்பெறுமென்றும் இது கொழும்பு கலையகத்தில் நடைபெறுமென்றும் கூறப்படுகிறது.

கலைவிழா சுதந்தர சதுக்கத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ் விழாவில் கண்டியநடனமும் நடனங்களும் இடம்பெறுமாம்.

கொலை, கொள்ளை, சதி என பதினொரு குற்றச்சாட்டுக்கள்!

ஏழு பேரும் நிமாண்டில்

அளவெட்டி கொள்ளை வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், புதன்

அளவெட்டி அம்பலவ கடைக்கொள்ளை சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டிருந்த ஏழு பேர் மீதும் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் நீதவான் திரு. ஐ. கோனந்தன் முன்னிலையில் பொலிசார் வழக்குத்தாக்கல் செய்தனர். இவர்கள் ஏழுபேரையும் தொடர்ந்து இம் மாதம் 16-ம் திகதிவரை நிமாண்டில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

ஏழு பேர் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டதாகக் முன்னாள், முதல் முன்று சந்தேகநபர்கள் சார்பாக சென்ற சனிக்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் மீது நீதவான் தீர்ப்புக் கூறினார். குணராஜா, குணபாலசிங்கம் மனோராசா ஆகிய மூவரும் தலா இருபத்தைந்து ஆயிரம் ரூபாய் பிணையில் செல்வதற்கு நீதவான் தனது தீர்ப்பில் கருவிக்கொண்டார்.

நீதவான் தீர்ப்பளித்து முடிந்ததும் சந்தேகநபர்கள் ஏழு பேர் மீதும் குற்றப்பத்திரிகையைப் பொலிசார் தாக்கல் செய்தனர். கண்ணும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. குணரத்தினத் திற்காக உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டெண்ட் திரு. எஸ். சந்தைய்யா வழக்கைத் தாக்கல் செய்தார்.

நாள்தோறும் ரூபாய் பெறுமதியான பொருள்கள் கொள்ளையடித்தது, சட்டவிரோதமாகக் கூடியது, நம்பிக்கை மோசடி செய்தது, சதி செய்தது என பொருத்தம் பதினொரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவ்வழக்கு மீதான விசாரணை இம்மாதம் 16-ம் திகதி நடைபெறும்.

(மாலை; நி.)

பனஞ்சாராய உற்பத்தி ஜனவரியில் தொடங்கும்

யாழ்ப்பாணம், புதன்

அடுத்த ஜனவரி மாதத்தில் வடக்கில் பனஞ்சாராய உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. சாராய வடி உபகரணங்கள் இன்னும்சில மாதங்களுக்கு வந்துவிடுமென்றும் அடுத்த ஜனவரியில் சாராய உற்பத்தி செய்யத் தொடங்கப்படுமென்றும் நவநிலைமுறை அமுலுக்குப் கொறப்பான திட்டப்வகுதி அதிகாரி திரு. சே. சண்முகலிங்கம் நம்பிக்கை தெரிவித்தார்.

கோத்தகங்களில் கள்ளு அடைப்பது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெல்லிப்பழையைச் சேர்ந்த ஒருவர் தினசரி முன்னூறு கோத்தகங்களில் கள்ளு அடைத்துத் தர முன்வந்திருப்பதாகவும் திரு. சண்முகலிங்கம் கூறினார்.

கோத்தகங்களில் கள்ளு அடைப்பது சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி வரைக் பகுதியினரை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டிருப்பதாகவும் இந்த அறிக்கை கிடைத்ததும் எந்தெந்த இடங்களில் கோத்தகங்களில் கள் அடைக்கலாமென்பது பற்றித் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

7 ஆண்டுச் சிறை

லண்டன் மே. 9

இந்திய மத்திய வங்கியின் லண்டன் கிளையில் நடைபெற்ற லஞ்சக்கணக்காளர் விசாரணையில் சம்பந்தப்பட்டதாக அந்த வங்கியின் முன்னாள் மானேஜர் பட்டேலுக்கு இன்று 7 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

சாந்தி சங்கானை
தினசரி 6-30, 9-30
முத்துராமன் -தேவிகா
நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்

REGAL (Jaffna)
Daily 5-15, 7-15 p.m.
Rod Taylor, Carol White
in
THE MAN WHO HAD POWER OVER WOMEN

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி,ஞாயிறு 2-30
எம்.ஆர். ராதா - ராஜம்
நடித்த
இரத்தக் கண்ணீர்

தினசரி 2-00 இரவு 9-45
நாகேஷ் - மனோரமா
முத்துராமன்
நடித்த
அனுபவி ராஜா
அனுபவி

ராஜா ஜெய்சங்கர் - கே.ஆர்.விஜயா
[யாழ்ப்பாணம்] முத்துராமன் - தங்கவேலு
தினசரி 4 காட்சிகள் நடித்த
நிலவே நீ சாட்சி

ராணி கிவாஜி கணேசன் - ஜெயலலிதா
[யாழ்ப்பாணம்] சுந்தரராஜன்—சந்திரபாபு
தினசரி 4 காட்சிகள் மற்றும்பலர் நடித்த
வரலாறாகின் ராஜா (வர்ணச் சித்திரம்)

சாந்தி — சங்கானை
தினசரி காலை 9-00 பி.ப.3-00 மட்டும்
குத்து விளக்கு

பணத்திற்காக குழந்தையை பேரம் பேசும்
விசித்திரத் தம்பதிகள்!
பணத்தைக்கொண்டு பெற்றோரை தேடும் குழந்தை
இவர்களை சந்திக்க!
யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன், கே.ஆர். விஜயா,
சந்திரபாபு, பேபி ராணி
நடித்த
கண்ணே பாப்பா
டைரக்ஷன்: பி. மாதவன், பி. ஏ.

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி பி. ப. 2-30,மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு காலை 10-30
★ சிவாஜி
★ லக்ஷ்மி
★ முத்துராமன்
★ நிர்மலா
நம்பியார்
நாகேஷ்
சங்கு

மற்றும் பலர் நடித்த
தங்கைக்காக
இசை: விஸ்வநாதன் டைரக்ஷன்: யோகானந்த்

லிடோ (யாழ்ப்பாணம்
[தினசரி 4 காட்சிகள்

ஜெய்சங்கர்
மனோகர்
ஆனந்தன்
'தேங்காய்'
சீனிவாசன்
பாரதி புஷ்பமாலா
நடித்த
முழுநீள நகைச்சுவைச் சித்திரம்
நான்கு கில்லாடிகள்

வரி விளம்பரம்

சாப்டிங்ஸ் 1 தொடக்கம் 7 அங்குலம் வரைக்கும் (M. S. Shaftings) வேண்டிய அளவுகளில் மலிவாகக் கிடைக்கும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4946

விற்பனைக்கு

ஆசிர்வாதி புதுவருட ராசிப்பலன் ஒரு ராசிக்குரிய ஒரு புத்தகம். 1-50 நீங்கள் என்ன வேண்டுமோ அதில் அருமையான பல நலன்கள் உளது. நம்பலாம். ஆசிர்வாதி சோதிட நிலையம் நெல்லியடி, 4987

கந்தர்மடம் சந்திக்கு காலையில் மாலை வீதியில் 8 பரப்புள் காணி கல்வீடுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நா. சண்முகநாதன், 66, மாலைவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 4994

தேவை

யாழ் நகர் எல்லைக்குள் அமைக்கப்படும் திரிக் (பிரதான வீதிக்கு அண்மையில்) 10 பரப்புக் காணி விலைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. விபரம் முன்னோ நேரிலோ தொடர்பு கொள்க. அ. தாசன், 49, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 4996

நற்குணமும் கல்விபறிவு முடைய ஒருவருக்கு அற்றோர் பிரோன் வேலை தேவை; வேலை யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டதாக இருந்தால் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4995, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4995

மாந்திரிக வசியம்

கணவன் மனைவி களிடையே உள்ள தகராறுகளை நீக்கி வாழ்க்கையில் இன்பமனுபவிக்க வேண்டுமா? விரும்பியவரை அடைய வேண்டுமா? பிரச்சினை எதுவாகினும் சுலுக்கமாக இடுவர் பெயருடன் தெரிவிக்கவும். எமது வசிய மாந்திரீகம் குறைந்த செலவில் நிறைந்த பலனைக் கொடுக்கும். ரகசியம் வெளியாகாது. ஏ. பி. எஸ். குமார், (மனோதத்துவ மாந்திரீகர்) 57, செஞ்சுலை ரோட், மட்டக்களப்பு. 4997

நாகம்ஸ் சினிமா
கல்முனை
தினசரி 4-30
OUR AGENT FLINT

தினசரி 6-30, இரவு 9-45
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு

பவானி
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-வாணிஸ்ரீ
நடித்த
நிறைகுடம்

யாழ் தியேட்டர்
(வல்வெட்டித்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்-அஞ்சலிதேவி
நடித்த
சக்கரவர்த்தித் திருமகள்

விற்பனையாகின்றது வாங்கிவிட்டீர்களா?
அருமந்த வகுப்பிற்குரிய
சமூகக்கல்வி நூல்
முதலாம், இரண்டாம், மூன்றும்
பருவங்கள் மூன்றையும் உள்ளடக்கிய ஒரே நூல்
பாடசாலைகள் பாவும் மகிழ்வுடன் உபயோகிக்கும்
ஒரேநூல்
ஆரம்ப சமூகக்கல்வி
வகுப்புக்குப் பக்கம் வர்ணப்படங்கள்.
கமலா குணராசா B, A. (Cey.), க. குணராசா
B.A. Hons(Cey). ஆகியோர் இணைந்த
உருவாக்கிய நூல்.
விலை மிக மலிவு விலை ரூபா: 3-30
ஸ்ரீலங்கா புத்தகசாலை
காங்கேசந்துறைவீதி — யாழ்ப்பாணம்.

கேள்வி விளம்பரம்

பனங்காமம் கிராமசபை

கீழ்க்குறிப்பிடும் வேலைகளை செய்வதற்கு ரூபா 5000/-க்கு மேல் மதிப்புள்ள குத்தகைப்படுத்தப்படக் ஒப்பந்தக்காரரிடமிருந்து 1972-ம் ஆண்டு மே மாதம் 20-ந் திகதி காலை 10-00 மணிவரையில் கேள்விப்பத்திரங்கள் எங்கும் ஏற்றுக் கொள்ளப்படும்

ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 10/- கிராமசபை அத்தோரிக் அலுவலக நேரங்களில் 19-5-1972-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திரப் பணம் செலுத்தி கந்திரோபூர்வமான பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்

கேள்விப்பத்திர பிரதி ஒன்று நிறைவேற்றுப்பொறியியலாளர்வவுனியாவும், அவர் கீழுள்ள ஆக்கிராசனர்களுக்கு கிடைக்கும் அதே திகதியில் கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும்

மேற்கொண்ட விபரங்களை மாவும் பனங்காமம் கிராமசபை அலுவலகத்திலோ அல்லது வவுனியாவிலுள்ள நிறைவேற்றுப்பொறியியலாளர் அலுவலகத்திலோ அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்

வேலைகள் விபரம்

1. பூவரசங்குளம் மடம் திருத்தல்
2. முன்று முறிப்பு கண்ணகை அம்மன்கோவிலடியில் புதிதாக ஒரு மடம் அமைத்தல்

இராசனம்
[ஒப்பம்]
த. தம்பையா, ஜே. பி.
கி. ச. தலைவர்
பனங்காமம்

கி. ச. அலுவலகம்
நாட்டாங்கண்டல்
வாங்குளம்
8-5-1972 3950

திறந்து வைத்தார்

வல்வெட்டித்துறை, திரு. பல வகிசருபா செல்வி கிடைப்பட்டவிருக்கும், வடமராட்சி ஸ்ரீ ராமலிங்கர் ஆச்சிரமத்தை. பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் சம்பிரதாயமுறைப்படி திறந்து வைத்தார்.

நியூ கார்லிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி.ப 2-30
சிவாஜி-கே.ஆர் விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

MANOHARA
Jaffna
Daily 4-45 7 & 9-45 p.m.
Sat. Sundays 10-30
Richard Harries
in
MAN IN THE WILDERNESS
(Scope-Color)

கேள்வி விளம்பரம்

கல்லடிவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 8000/-க்கு மேற்பட்ட பெறுமதிக்குள் கேள்விப்பத்திர முலம் விற்பனைக்கு இருக்கின்றன. 18-5-72-க்கு முன்னர் ரூபா 25/- ஷை சங்க அலுவலகத்தில் கட்டிக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

9ம் வைத்த கேள்விப்பத்திரங்கள் 20-5-72 நண்பகல் 12 மணிக்குமுன் பதிவுத் தபால் மூலம் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்

பொதுமுகாமையாளர்
கல்லடிவேலி-நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
நெல்லியடி
கரவெட்டி
7-5-72 3959

2-வது பயிற்சிக் கல்லூரி

கோண்டாவில், செவ்வ

ஆங்கில ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க கல்விப்பணிப்பாளர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூது மேலும் ஒரு பயிற்சிக் கல்லூரியை நிறுவுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

புதிய பயிற்சிக் கல்லூரியை நிறுவுவதற்கான இடம் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை, அதேவேளை பொழும்புக்கு அருகாமையில் அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

ஆங்கில ஆசிரியருக்குப் பயிற்சி அளிக்க முதலாவது பயிற்சிக் கல்லூரி இவ்வருடம் ஜனவரியில் மீரிகமவில் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இனிமேல் அமைக்கப்படவிருக்கும் கல்லூரி இரண்டாவது பயிற்சிக் கல்லூரியாகும்.

போட்டியின் பின்னரே புதிய தலைவர்

யாழ்ப்பாணம், செவ்

மருத்துவத்துறை நகரசபையின் தலைவர் பதவிக்கு திரு என் நடராசாவும் திரு சு முருகேசும் போட்டியிட்டவரென்றும், திரு. என் நடராசா 2 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார் என்றும் நகரசபையின் சென்ற கூட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்த்து

கோண்டாவில், செவ்.

'நாவினால் சிறிந்தனைத்திற்கும் தமிழ் நல்கியதற்கும் ஆற்றிய அரிய சேவையை நாம் என்றும் மறவோம்".

இவ்வாறு சோமம்புத்தூர் புனிதமிக்கேல் சம்மனசாளர் தேவாலயத்தைச் சேர்ந்த வண. சி. ம. விசுவாசம் மேற்திராணியாராக பதவியேற்றதை விடு சிறிஸ்தவ தமிழ் இலக்கிய மன்றத்தினர் விடுத்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர். இலங்கையிலிருந்து மற்றும் பலர் வாழ்த்துச்செய்திகள் அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வட வியட்னாமுக்கு ராணுவ 'சப்ளை' கிடைக்காதபடி

துறைமுகங்களில் கண்ணிகளை வைக்க நிக்ஸன் உத்தரவு

சோவியத் கப்பல்களை அப்புறப்படுத்த அவகாசம்

வாஷிங்டன் மே 9

வடவியட்னாம் துறைமுகங்களில் கண்ணிவெடிகளை வைத்து வடவியட்னாமியருக்கு ராணுவ சாதனங்கள் போய்க் கிடைக்காதபடி தடை செய்யுமாறு அங்குள்ள அமெரிக்க படைகளுக்கு அதிபர் நிக்ஸன் உத்தரவிட்டிருக்கிறார்.

வடவியட்னாம் துறைமுகங்களிலுள்ள சோவியத் மற்றும் நாடுகளின் கப்பல்களை மூன்று தினங்களுக்குள் விலகிக்கொள்ளும்படியும் அவர் எச்சரித்துள்ளார்.

வடவியட்னாம்படைகளின் உக்கிரமான தாக்குதலையடுத்து தென்வியட்னாமியரின் பல நகரங்கள் வீழ்ச்சியடைந்துள்ளதாலும், வரலாறு கம்போடியா பகுதியிலும் வடவியட்னாமியரின் கை ஓங்கிக்கொண்டிருப்பதாலும் அதிபர் நிக்ஸன் இந்தப்புதிய நடவடிக்கைகளை அறிவித்திருப்பதாகக் கருதப்படுகிறது.

நேற்று சுமார் முன்று மணிநேரம் உயர்தர ஆலோசகர்களோடு தேசிய பாதுகாப்புச்சபை உறுப்பினர்களோடும் ஆலோசனைகள் நடத்திய பின்னர் அதிபர் நிக்ஸன் இந்த நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி முடிவுசெய்தார். இன்று காலையில் அமெரிக்க மக்களுக்கு விடுத்த ஓர் அறிக்கையில் தனது புது நடவடிக்கைகள் பற்றி அவர் அறிவித்தார்.

வடவியட்னாம் துறைமுகங்கள் பலவற்றிலும் கண்ணிவெடிகளை வைக்கும் படி உத்தரவிட்டிருப்பதாக அதிபர் தெரிவித்தார். வடவியட்னாமியருக்கு ராணுவ சாதனங்கள் சென்றடைவதைவிடாமல் இந்த உத்தரவுகளை அதிபர் நிக்ஸன் பிறப்பித்துள்ளார். இதேவேளையில் வடவியட்னாமியரின் ராணுவ நிலைகள் மீது தாக்குதல்கள் தொடர்ந்து இருக்கும் என்றும் அறிவித்தார். விமானத்தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படுகிறதையும் அறிவித்தார்.

வியட்னாமில் அமைதி வர நீர்வொன்று ஏற்படவேண்டுமென்றே நாம் முயற்சி செய்து வருகின்றோம். ஆனால் அமைதி முயற்சிகளை எல்லாம் அவர்கள் புறக்கணித்துவிட்டு தாக்குதல்மூலமே பதிலளித்து வந்துள்ளார்கள் என்று அதிபர் நிக்ஸன் கூறினார்.

நிபந்தனைகள்

புதிய நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டுமானால் இரு நிபந்தனைகளை அவர் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட்கள் பிடித்துவைத்துள்ள அமெரிக்க போர்க் கைதிகள் அனைவரும் விடுதலைசெய்யப்படவேண்டும் சர்வதேச மேற்பார்வையின் கீழ் போர்நிறுத்தம் ஏற்படுவதற்கு இணங்கவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்

இதற்கு கம்யூனிஸ்ட்டுகள் இணங்கினால் வியட்னாமிலுள்ள அமெரிக்க படைகள் ஆகாயத்தையும் நாட்டு வாதங்களில் திடீர்ப்பிரவேசத்தையும் நிறுத்தவும் நிக்ஸன் தெரிவித்துள்ளார்.

கல்வி மந்திரியுடன் பேட்டி

வக்கீல்பித்துறை, செவ். இம்மாதம் 13ந் தேதி சோக்குவில் பல தொழிற்சாலைகளுக்கு விஜயம் செய்ய விருக்கும் கல்வி அமைச்சர் அர்ஹாஜ் டாக்டர் பதியுதீன் உஸ்மானி வணிக மாணவர்களுக்கு ஒரு பேட்டி அளிக்கவுள்ளார்.

கணக்குப் பதிவாளர் பயிற்சியில் 5 பாடங்களில் சித்திபெறுவதாலே தரப்பத்திரம் வழங்கப்படுவதென்ற நிபந்தனை நீக்கம், ஏதாவது 4 பாடங்களில் சித்திபெற்றால் போதுமென்றும், நான்சித்தி முறையைக் கைவிடவேண்டும் என்றும் வணிக மன்றப் பிரதிநிதிகள் கோருவர்.

தூதுக்குழுவில் மன்றத் தலைவர் திரு மோன். ஜெயராமா, செயலாளர் செல்வி நந்தி சேகியர், பொருளாளர் திரு திருச்செல்வம், வடக்குக்கிழக்கு மாணவர்களுக்கு மன்றத் தலைவர் திரு ஜே ஜெயக்குமார் ஆகியோர் இடம் பெறுவர்.

டிப்ளோமா பட்டப் பயிற்சி

லண்டன், மே 9

இலங்கையைச் சேர்ந்த இயந்திரப் பொறியியலாளர் ஒருவர் இப்பொழுது பிரிட்டனில், இயந்திரப் பொறியியல் டிப்ளோமாப் பட்டம் பெறுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த திரு. சந்தரலிங்கம் என்ற இந்தப் பொறியியலாளர் தென் இங்கிலாந்து பொலிடெக்னிக்கில் பயிற்சிபெற்று வருகிறார்.

ஜூன் மாதம் அவர் எழுதும் பரீக்ஷையில் சித்தி பெறுவார். திரு. சந்தரலிங்கம் சாட்டேட் பொறியியலாளர் ஆவதுடன் இயந்திரப் பொறியியலாளர் நிறுவனத்தின் அங்கத்தவரு மாவார்.

திரு. சந்தரலிங்கம் சுமார் 12 வருடங்கள் இலங்கையில் நீர்ப்பாசன இலாகாவில் பணிபுரிந்திருக்கிறார். 1973-ம் ஆண்டு இவர் தாயகம் திரும்பவிருக்கிறார்.

இவரது பயிற்சித் திட்டத்தை பொழும்புத்திட்டத்தின் நுண்தொழில் பிரிவின் கீழ் பிரிட்டன் ஒழுங்குசெய்துள்ளது.

பாரதத்தின் பணக்காரர்

புதுடில்லி, மே. 9

பாரதத்தின் மிகப் பெரிய பணக்காரராக மாலோனாவைச் சேர்ந்த திரு. வி. டி. சொனகர் விளங்குகிறார்.

இந்தக் கோடீஸ்வரர் சமீபத்தில் தனது சொத்து விபரத்தை வெளியிடுகையில் 6 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை வெளியிட்டார்.

எழுத்தாளர் மாநாடு

மாஸ்கோ, மே 9

"5-வது ஆபிரிக்க-ஆசிய எழுத்தாளர் மாநாடு அடுத்த ஆண்டில் நடைபெறும். ஆசிய, ஆபிரிக்க எழுத்தாளர்களுடன் கலாசார உறவுக்கான சோவியத் கமிட்டியின் தலைவர் பாஷின் இதை அறிவித்துள்ளார்.

இம் மாநாடு பற்றி கமீல் பாஷின் மேலும் கூறியதாவது:

ஆபிரிக்க ஆசிய எழுத்தாளர் இயக்கம் முன்னைவிட வலுப்பெற்றுள்ள இவ்வேளையில் இம்மாநாடு கூடுகிறது. இனக் கலத்திர நாடுகள் மற்றும் போராடும் நாடுகளின் கலைச்சாரத்தில் ஏகாதிபத்தியம் மற்றும் காலனி ஆதிக்கத்தின் பிற்போக்குத்தனம் ஊடுருவுவதற்கு எதிரான போராட்டத்தில் அறிவுத்துறையினரை மேலும் நெருக்கமாக ஆனி திரட்டுவதற்கு ஆபிரிக்க ஆசிய எழுத்தாளர் இயக்கம் தொண்டாற்றுகிறது. கலைத்தாளின் தலைவரான அக்மா அதாவின் இதற்கான தயாரிப்புகள் ஏற்கனவே நடைபெற்றுவருகின்றன: ஆபிரிக்க எழுத்தாளர்களின் நூல்கள் அதிகு வெளியிடப்படும். மாநாட்டுக்கான தயாரிப்புகளில் தீவிர பங்கெடுக்குமாறு எழுத்தாளர் அனைவரையும் அழைக்கின்றேன்"

சோவியத் அரசுக்கு நிக்ஸன் எச்சரிக்கை

வடவியட்னாமியருக்கு ராணுவ உதவிகள் வழங்கும் வெளிநாடுகளை அதிபர் நிக்ஸன் எச்சரித்தார்.

வடவியட்னாமியரின் துறைமுகங்களில் குறிப்பாக "ஹைப்பொங்" துறைமுகத்தில் இருக்கும் சோவியத் கப்பல்களையும் ஏனைய கப்பல்களையும் வெளியேறிவிடும்படி அதிபர் எச்சரித்துள்ளார். இந்தக்கப்பல்களுக்கு மூன்றுநாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை மீறும் கப்பல்களுக்கு ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பேற்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார். இந்தத் துறைமுகங்களுக்கு தனியாகவோ ஏற்றிக்கொண்டு எந்தக் கப்பலும் வரக்கூடாதென்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்களின்பின் இந்தக் கண்ணிவெடிகள் இயங்க ஆரம்பிக்கும்.

வியட்னாமிலுள்ள அமெரிக்க படைகளையும் பிரஜைகளையும் பாதுகாக்க தம்மால் எல்லாவற்றையும் செய்யப்போவதாகவும் நிக்ஸன் அறிவித்தார்.

கடும் தாக்குதல்

வடவியட்னாம் தலைநகர் ஹனாய் நகரின் சுற்றுவட்டாரங்களில் அமெரிக்க விமானங்கள் தாக்குதல்களில் ஈடுபட்டதை அமெரிக்க அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர்.

தாக்குதலில் ஈடுபட்ட அமெரிக்க விமானங்கள் யாவும் பத்திரமாக நிலைக்குத் திரும்பியதாகவும் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் ஏழாவது கடற்படையைச் சேர்ந்த போர்க்கப்பல்களும் விமானங்களும் வடவியட்னாமியரின் ராணுவ நிலைகளை மோசமாகத் தாக்கியுள்ளன. இரண்டு அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தியுள்ளதாக வடவியட்னாமியர் அறிவித்துள்ளனர்.

வானொலியில் ரேஸ் முடிவுகள்?

கொழும்பு, செவ்வாய் ரேஸ்முடிவுகளை வானொலி மூலம் ஒலிபரப்புவது பற்றி இலங்கை ஒலிபரப்புக் கட்டுத்தாபனம் ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

நுவரெலியாவில் நடைபெறும் வடக்குமாகாண ரேஸ் முடிவுகளையும் வானொலியில் ஒலிபரப்புவதின் மூலம் வருமானத்தை அதிகரிக்க முடியும் என அதிகாரிகள் எதிர்பார்ப்பதாகத் தெரிகின்றது.

100 பிரயாணிகளுடன் விமானத்தை வெடிவைத்து தகர்க்கப் போகிறார்களாம்

அரபு கொரில்லாக்கள் பயமுறுத்தல்

கெய்-ரோ, மே 9

பெல்ஜியம் விமானம் ஒன்றை மூன்று அரபுக் கொரில்லாக்கள் இஸ்ரேலிய நிலை சர்வதேச விமான நிலையமொன்றில் நடுத்தரவத்தனர்

இஸ்ரேலியர் சிறையிலுள்ள நூறு அரபுக்கொரில்லாக்களையும் விடுதலைசெய்ய வேண்டும் இல்லையெனில் விமானத்தை அதனுடனிருக்கும் சுமார் 100 பிரயாணிகளையும் சேர்த்து வெடிவைத்துத்தகர்க்கப் போவதாக அவர்கள் அறிவித்துள்ளார்

பிரஸல்ஸிலிருந்து டெல் அவிவ் நோக்கிப் பறந்து கொண்டிருந்த விமானத்தை இரு ஆண்களும் ஒரு பெண்ணும் கொண்ட கொரில்லாக்கள் குழு துப்பாக்கி முனையில் தம் வசம் எடுத்துக்கொண்டது. கழுத்துப் பட்டிகளுக்கு வேறு ஆயுதங்களும் வைத்திருந்த இந்த மூவரும் பிரயாணிகளையும் இறங்க அனுமதிக்காததுடன் அதிகாரிகளையும் அடுத்தவர அனுமதிக்கவில்லை. விமானம் தரை இறங்கியவுடன் அதிகாரிகள் விமானத்தைச் சூழ்ந்து கொண்டு கொரில்லாக்களுடன் ஒலிபெருக்கி மூலம் பேசினார்கள். நிபந்தனைகளை ஏற்காவிடில் விமானத்தையும் பிரயாணிகளுடன் சேர்த்து வெடிவைத்துத் தகர்ப்போம் என்று கொரில்லாக்கள் கூறினார்கள்

ஆசிரிய இடமாற்றம்

ஜூன் 10க்குமுன் மனுச் செய்க

கொழும்பு, செவ். அடுத்த ஆண்டு ஜனவரியில் இடமாற்றம் தேவைப்படும் ஆசிரியர்கள் இவ்வருடம் ஜூன் 10-ம் திகதிக்கு முன்னர் தமது பிராந்திய கல்வி அத்தியட்சகர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளும்படி கல்வி அமைச்சர் கோரியுள்ளார்.

இதுபற்றி ஆசிரியர்களுக்கு தெரிவிக்கும்படி சகல மாகாண அதிபர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். ஜூன் பத்தாம் திகதிக்குப் பின்னர் வரும் எல்லா இடமாற்றக் கோரிக்கைகளும் கல்வி அமைச்சின் பிராந்திய பிரிவுகளால் நிராகரிக்கப்படும் என்று தெரிகின்றது.

ஆசிரியர்களின் இடமாற்றக் கோரிக்கைகள் பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் ஆலோசனைக்கெடுக்கப்படும் என்று தெரிகின்றது.

1. ஒரு பிராந்தியத்திலிருந்து வேறுப் பிரதேசத்துக்கு இடமாற்றம்.

2. 1972 டிசம்பர் 31 க்கு முன்னர் கடினப்பிரதேசங்களிலிருந்து ஆண்டுகள் கடமை புரிந்தவர்கள் அல்லது தமது சொந்த வசிப்பிடத்திலிருந்து நான்கு ஆண்டுகளுக்குமேல் வேறு இடங்களில் சேவை வகிப்பவர்கள்.

3. சம தகுதியுள்ள ஆசிரியர்களின் பரஸ்பர இடமாற்றக் கோரிக்கை.

4. வைத்திய ஆலோசனையின்பேரில் உடல்நிலை காரணமாகக் கோரப்படும் இடமாற்றம்.

5. வைகல் பணிபுரிவோரும் இடத்துக்கு மனைவியோரும் இடமாற்றம்.

மாவட்ட பயிற்றாளர்கள் நியமனத்திட்டத்தில் கீழ் நியமனம்பெற்ற ஆசிரியர்கள் எல்லோரும் ஆசிரியர்கள் நியமனம் பெற்ற மாவட்டத்துக்கு வெளியில் எந்தவொரு காரணம் கொண்டும் இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள் என்று தெரிகின்றன. இதே கொள்கையே அரசாங்கத்திலுமற்ற ஆசிரியர்கள் விஷயத்திலும் கைப்பிடிக்கப்படும்.

வாழ்க்கையில் வெறுப்புற்று கிருமிநாசினியிடம் தஞ்சம்

மாவிட்டபுரம், செவ். நிரந்தரமான உழைப்பு இல்லாத ஒருவர் மனைவியின் நகைகளை விற்றுச் சீவியம் நடத்தியபின் இறுதியில் கிருமிநாசினியிடம் தஞ்சம் புகுந்து உயிரை மாய்த்துக்கொண்டார். இச்சம்பவம் ஆனைவெட்டி தெற்கில் நடந்துள்ளது.

திருக்கோணமலையைச் சேர்ந்த சி. கோணலிங்கம் என்னும் 30 வயது இளைஞரான இவரின் மரணம் பற்றிய விசாரணையிலேயே இவ் விபரம் தெரியவந்தது.

இவரது மரணம் குறித்த மரணவிசாரணை அதிபர் திரு. இ. மாகைப்பிரமணியம் விசாரணைசெய்தபோது இறந்தவரின் மனைவி கூறியதாவது:

சம்பவதினம் வாழ்ப்பாணத்துக்குச் சென்ற என் கணவர் ஆக்கிருந்து மாலை 5 மணியளவில் வீடு திரும்பி மகிழ்வாக இருப்பதாக கூறினார். பின்பு கிணற்றடிக்கு சென்று கைகள் கழுவிய பின் சாப்பிட உட்கார்ந்தார். அவரின் கிருமிநாசினி மணம் வீசியதால் நான் குழறினேன். ஆனால்கள் வந்த ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லமுயன்றபோது அவர் இறந்துவிட்டார்.

மகளான கிராமசேவை 3-ம் வகுப்பாசிரியர் உறுப்பினர் திரு. உலகநாதன் சாக்கிய மளிக்கையில், மாமனாரின் வீட்டாரத்தைச் சேர்ந்தவர். நாளைக்கு எல்லோரும் சேர்ந்து ஒரு கொண்டாட்டம் நடாத்தப் போகிறீர்கள் என்று மாமனார் முதல்நாள் என்னிடம் கூறினார்" என்றார்.

சாலைசென்றவர்பொலிஸ் அதிபர் தரம், தந்தையார் ஆகியோருக்கு எழுதிவைத்திருந்த கடிதங்கள் விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என தீர்ப்பு வழங்கி உற்றவுறவு உற்பத்திக்காக பரிசீலிக்கப்படும் கிருமிநாசினிகளை வீடுகளில் வைத்திருப்பதாலேதான் இப்படியான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. ஆகவே அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறினார். .....

கடுப்பிடி.

செவ்வாய். இலக்கியவிடுதியில் புதிய முயற்சியைப் பின்பற்றி நெல்லியடியிலும் பா இடைப்பகுதி உரை வரங்கை நடாத்துவதற்கு நெல்லியடி இளைஞர் முடிவு மானித்துள்ளது.

குற்றத்தை ஒப்புக்கொண்டார்!

மாவிட்டபுரம், செவ். வாடி வீட்டுக்களவு சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்ட நபருக்கு இம்மாதம் 12-ம் திகதி தண்டனை வழங்கப்படவிருக்கிறது.

காங்கேசந்துறை வாடி வீடு உரிமையாளர் சிவாவின் குடிசையை வெடிபொருள் இருந்து 200 ரூபா பணம் மணிக்கூடு, கோதுமை ஆகியவற்றை களவாடிய சம்பந்தமாகக்கைது செய்யப்பட்ட பெருமாள் முத்து என்ற இளைஞர் மன்றாடி நீதிபதி ஜ. சிவாநந்தன் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிபதிமுன், நான் குற்றவாளி என ஒப்புக் கொண்டதால் இம்மாதம் 12-ம் திகதி தீர்ப்பு வழங்குவதாகவும், வை ஆட்டோ எங்கே ஆராவும்படி நீதிபதி தெரிவித்தார்.

கனிஷ்ட ஊழியர்க்கும் உயர் பதவி

கொழும்பு, திங்கள் அரசாங்க சேவையில் உயர் பதவிகளில் தகுதி வாய்ந்த கனிஷ்ட ஊழியர் நியமனம் பெறுவதையில் இப்பதவிகளில் 50 விகிதத்தை ஒதுக்கிவைக்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

இம்முறை நடைபெற்ற பதவி உயர்வுகளான விசேஷ பரீக்ஷைகளுக்கு ஏற்ப உயர் பதவிகளில் உள்ள காலி இடங்களை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதாகத் தெரிகிறது.

புதிய கல்வித் திட்டம்

ஊர்காவற்றுறை, செவ். "நம் நாட்டில் ஏற்படுத்த சோஷலிஸக் கல்வித் திட்டத்தின் பிரகாரம் மாடசாலைகள் தோறும் விஞ்ஞான விஞ்ஞானக் கழகம் ஆரம்பிக்கப்படுவதன் நோக்கம் வேலையில்லா என்ற பீதியை ஏற்படுத்தாது வாழ்க்கையுடன் தொடர்புடைய தொழிலைச் செய்யக்கூடிய சான கல்வியை வளர்ப்பதேயாகும்"

சாவகச்சேரி வித்தியாசாலையில் நடைபெற்ற விஞ்ஞான விஞ்ஞானக் கழக அமைப்புக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய பண்டிதர் திரு. ச. குமாரசுவாமி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கழகத்தின் உறுப்பினர்களைப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: பொருளாளர்: திரு ச குமாரசுவாமி, தலைவர்: செல்வன் சி. திருக்கேதீஸ்வரன், காரியதரிசி: திரு செ. ஸ்ரீதரன், தலைவர்: செல்வன் ப. தேவதாசன்.

மகாகும்பாபிஷேகம்

ஆனைக்கோட்டை, செவ் உருப்பராய் கற்பகவிநாயகர் கோயில் மகாகும்பாபிஷேகம் மே மாதம் 22 ம் திகதி முற்பகல் நடைபெறவிருக்கிறது.

புதிய ஜே. பி.

வல்வெட்டித்துறை, செவ் திரு. வி. பி. கந்தராஜா நீதி அமைச்சினால் ஜே பி யு எம் ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஆனைக்கோட்டை கிழக்கு என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி கற்றபின்னர் கொழும்பு செவ். கோசல் கல்லூரியில் உயர் கல்வி பயின்று சமடக் கல்லூரியிற்புகுந்தார் அக்கழகத்தின் செயலாளராகக் கடமையாற்றினார்.

உலகச்சந்தையில் இலங்கை

நரித் தோலுக்கு கிராக்கி இல்லை

கொழும்பு, செவ் உலக நரித்தோல்களுடன் நம் நாட்டு நரிகளின் தோல்கள் போட்டியிடமுடியாத நிலை ஏற்படக்கூடும்போல் இம்முறை விப்ஸிக்கில் இடம் பெற்ற நரித்தோல் ஏலவிற்பனையில் இலங்கை கலந்து கொள்ளவில்லை.

கடந்த ஆண்டில் இந்த ஏலவிற்பனைக்கு அனுப்பப்பட்ட நரித்தோல்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விலை கிடைக்காததும் இதற்கு ஒரு காரணமாகும்.

கடந்த ஆண்டிற்போலவே இம்முறையும் மற்றோவியாவிலிருந்து வந்திருந்த வெளி நிற நரித்தோலும் சிவப்பு நிற நரித்தோலும் அதிக விலைகளைப் பெற்றன. போலந்திலிருந்து வந்திருந்த நீல நிற நரித்தோல் ஒன்று 33 டாலருக்கு விற்பனையாகியது. ஜெர்மன் ஜனநாயக குடியரசிலிருந்து 2,00,000 நரித்தோல்கள் விற்பனையாயிற்று. 13 நாடுகள் இதில் பங்குபற்றின.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

10-5-72 புதன்

(செய்திகள், காலை 6-30 மணி12-45, மாலை 6,00 இரவு 9-00)

காலை 6-15 நாதாஞ்சலி 6-20 சுவாதி சிந்தனை எஸ். கே. வேலாயுதபிள்ளை 6-25 இஸ்லாமியநற்சிந்தனை, 6-50 துதிப்பாடல் 7-15 மறக்குடியரசுபாடல்கள், 7-30 மாலைவானொலி செய்திகள் 7-35 குரல்வலை, 8-00 இசைவேளை சரஸ்வதி பாக்கியராஜா பரமேஸ்வரி விஜயரத்தினம், 8-15 இஸ்லாமியகீதம்

6-15 கந்தரோலிக்க சிறுவர் நிழ்ச்சி நடத்துபவர்: சகி பிரான் பெனடிக், 6-30 பாடுக தாலபூஷணி தனிவரசம், 7-00 கஞ்சன் ஆம்மாண, 7-15 முச்சந்தி பஜனம்பத்தும், 7-30 உலகச் செய்திகள் 7-35 மெல்லிசைப்பாடல்கள் (மறு ஒலிபரப்பு) 7-45 நாடகம்-ஆடாது செய்பவர் எழுதியவர்: மாயவன்' 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-10 செய்தியின் பின்னணியில் 9-30 இசைக் கச்சேரி [நாகரம்):

எள் இறக்குமதி செய்ய அனுமதிக்கவும்

அரியாலை, செவ் நல்லெண்ணெய் உற்பத்திக்குத் தேவையான எள் இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு யாழ்மாவட்ட நல்லெண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் அரசினரை கேட்டுள்ளது.

இப்பொழுது பொதுச் சந்தையில் எள்ளுக்கு நல்ல விலை ஏற்பட்டுள்ளதாலும், இதனால் நல்லெண்ணெய் உற்பத்தியாளர் பலர்பாதிக்கப்பட்டுள்ளதாலும் உள்ளூரில் பயிரிடப்படும் எள் தேவைக்குப் போதாமல் இருப்பதாலும் எள்ளுத் தட்டுப்பாடின்றி நீக்க குறிப்பிட்டளவு எள் இறக்குமதி செய்யப்பட வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

.....

இடமாற்றம்

இலுப்பையடிக்குளம், செவ் மன்னார் கரடிக்குளி அ மு க வாடசாலையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய ஜனாப் எம் சி ஐ கரீம் காரர் திங்கள் முதலாம் திகதி முதல் காக்கையன்குளம் அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

"திட்டஅமைச்சு ஆதரவளிக்கும்"

பருத்தித்துறை, செவ் "கிராமங்களிற் கிடைக்கும் மூலப் பொருள்களைத் தக்கமுறையிற் பயன்படுத்த வேண்டும் இயற்கை கொண்டு வடித்த வாலிபர் தொழிலவர்களை ஏற்படுத்த முடியும் இவ்வித முயற்சிக்கு இன்றைய அரசாங்கத்தின் திட்ட அமைச்சு ஆதரவளிக்கும்"

இவ்வாறு காரைநகர்-கரவெட்டி இளைஞர் அபிவிருத்தி இயக்க ஆண்டு விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசிய கடமராமிசி தெற்கு-மேற்கு அபிவிருத்தி அதிகாரி திரு வி எக் சுவாமிநாதன் கூறினார் திரு ஜேயக்குமார் பேசுகையில் இலக்கியங்கள் சமூதாய ஏற்றத் தாழ்வுகளையும், மக்களின் அபிலாஷைகளையும்பிரதிபலிக்கவேண்டுமென்றும் இலக்கியவளர்ச்சியில் பேரவிடமனப்பான்மை தவிர்க்கப்பட வேண்டுமென்றும் கூறினார்

பேராசிரியர் வருகிறார்

மாவிட்டபுரம் செவ். இலங்கையின் பலபாகங்களிலும் சைவ இலக்கியச் சொற்பொழிவுகள் நடாத்து வதற்காக கிருஷ்ண தேவி அரசாங்க கலைக்கலூரி தமிழ்துறைப் பேராசிரியர் திரு. எம். வாசுதேவன் இம்மாதம் 14-ம் திகதி கொழும்புவந்து சேரவிருக்கிறார்.

இவர் கொழும்பு கண்டி, திருகோணமலை, அனுராதபுரம், வவுனியா யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இம்மாதம் 20-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரும் இவர் ஒருவாரம் இங்கு சொற்பொழிவு நடாத்திய பின் தாயகம் திரும்புவார்.

தரம் அறிந்த அறிஞர்கள்
கோவிலிலும் விசேஷ வைபவங்களிலும்
விரும்பிப் பாவிக்கிறார்கள்
பத்திர முலம் அரைத்தெடுத்த

'சூரியன்' வியாபார சின்னமுடைய
சந்தனம்
தயாரிப்பாளர்கள்:-
நாஷனல் பெர்பியூமறி வேக்ஸ்
கிடைக்குமிடம்
சுந்தரம் பிறதர்ஸ்
73, மிச்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனவாகிறது! விற்பனவாகிறது!
நவோதய புலமைப் பரிசைக்குரிய
கடந்த கால வினாப்பத்திரங்களைத் தழுவி
திரு. S. ஜெயபாலன் அவர்களால் தயாரிக்கப்பெற்ற
சிறந்த மாதிரிப் பயிற்சிகள்
கணிதம் 2-25
பொதுஉளச்சார்பு 2-25
இன்றே வாங்கிப் படித்துப் புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொள்ளுங்கள்
ஞானசுரபி புத்தகக் கம்பனி
237, மிச்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.

காஷ்மீர் எல்லை மோதலில்

இந்திய தரப்பில் 24 பேர் பலியாகினர்

பாக். தரப்பில் இதைவிட அதிகமாம்

புதுடில்லி, மே. 9

நேற்று மாத்திரமே ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பத்தாவது தடவையாக பாகிஸ்தான் எல்லைப் படைகளுக்கும் இந்திய எல்லைப்படைகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் 24 இந்திய வீரர்கள் கொல்லப்பட்டனர். 56 இந்திய வீரர்கள் காயமடைந்தனர், மூன்று பேரைக்காணவில்லை.

இந்தத் தகவலை இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் இந்திய ஆட்சிமன்றத்தில் அறிவித்தார்

மேற்கூறியுள்ள இந்திய படைகளை இப்பொழுதுக்கு அப்புறப்படுத்தும் உத்தேசம் எதுவும் கிடையாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்

மேற்கில் நிரந்தரமான அமைதிக்கு உறுதி ஏற்படக் கத்திக்கொண்டு கொள்கை வேறுபாடுள்ள நாடுகளிடிருந்து தள்ளி நெக்கு தூதுவர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாகத்தெரிகின்றது.

இந்துமாக்கடல் பிரதேசத்தை அமைதிப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்துவது சம்பந்தமாகவும், இப்பகுதியை அணு ஆயுத சோதனைகளிலிருந்து விடுவிப்பதற்காகவும் வெளிநாடுகளில் பிரசாரம் செய்வதன் மூலம் இக்கொள்கையை வலுப்படுத்தப் பூர்வாங்க வேண்டுமென தூதுவர்களுக்கு அறிவுறுத்தப்படிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

இலங்கைக்கு இந்த விஷயத்தில் அதிக ஆர்வமுண்டு கிடையாதென்ற வாக்கில் வெளிநாட்டு பத்திரிகை செய்திகளின் காரணமாக எழுந்துள்ள தப்பபிப்பிராயங்களைப் போக்கும்படியும் தூதுவர்கள் கோரப்பட்டுள்ளனர்.

மகாநாடு

இலுப்பைக்குளம், செல். மருதமடுப்பகுதியில் ஆடிப் பெருநாளை முன்னிட்டு இதற்கான ஒழுங்குகள் செய்வதற்காக மன்னார் கச்சேரியில் நாளை மன்னார் அரசாங்க அதிபர் ச. கதிர்காமம் தலைமையில் மகாநாடு ஒன்று நடைபெற இருக்கின்றது. மகாநாடு ஒற்று மேற்கு முதல் கி. சமய அதிகாரிகளையும் அழைக்கப்பட்டுள்ளார்

விடுதலை

மாவிட்டபுரம், செல். வயாவிளாக் கிழக் அலுவலகர மறுப்புவழக்கில் சாக்கிலிக் முருகபாக்டைத் தொடர்ந்து தடுத்திபதிதிரிவை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

வயாவிளாக் சேர்ந்த கிறிஸ்மை சமூகத்தைச் சேர்ந்த கதிரன் சேகரா சமய வயாவிளாவில் உள்ள கிறைஸ்ட்டார் நிலையம் ஒன்றில் கிழக் அலுவலகரம் செய்யவிடாது தடுத்ததாகக்குற்றஞ்சாட்டி மேற்படி நிலையப்பொறுப்பாளர் நாகர் கந்தையாமீது சமூகக்குறைபாடு ஒழிப்புச் சட்டத்தில் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஐ. கிளாஸ்டன் முன்னிலையில் நடந்தது

பூங்காவனம்

மாவிட்டபுரம், புதன் மாலை மாமாரியம்மன் கோயில் பூங்காவனத் திருவிழா இன்று நடைபெறுகிறது. காலை சங்காபிஷேகமும் அன்னதானமும் நிகழும்.

—

யாழ்.மாநகரசபை

2ம் வட்டார தவறணைக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாண மாநகரசபை இரண்டாம் வட்டாரக் கள்ளுத் தவறணையை அவ்விடத்தில் அமைக்கவேண்டாம் என்று குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி பகுதி அரசாங்க அதிபரிடம் மகஜர் மூலம் கேட்டுள்ளது

இக் கள்ளுத் தவறணை செம் ஜேம்ஸ் மாவித்தியாலயம், செம் ஜேம்ஸ் தேவாலயம், குருநகர் சனசமூக நிலையம், விளையாட்டு மைதானம், பொதுஜன வாசிப்புக் குரிய மலசல கூடம், அதிக மாகப் பெண்களே கடமை யாற்றுகின்ற புகையிலை, பீடி, தொழிற்சாலைகள் போன்றவற்றுக்கு அண்மையில் இருப்பதால் இவ்விடத்திலிருந்து இதை மாற்றும்படி அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

—

அமைச்சருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், புதன் வடமாகாணத்து விஜயம் செய்யவிருக்கும் கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் இம்மாதம் 15ம் திகதி யாழ்ப்பாணம் செம் ஜேம்ஸ் மகாவித்தியாலயத்துக்கும் விஜயம் செய்வார். அன்று காலை 10 மணிக்கு மேற்படியாடசாலை அதிபர் ஆசிரிய சங்கம் அமைச்சருக்கு வரவேற்பு விக்கும்.

—

இதேசமயம் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் வர்த்தகத் தொடர்பைத் தொடங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் சோவியத் வெளியுறவு மந்திரிக்கும் அமெரிக்க மந்திரிக்குமிடையில் ஆரம்பமானது. (3ம் பக்கமும் பார்க்க)

தெலுறுஓய நீர்ப்பாசன திட்டம்

42 கிராமங்கள் நீரில் மூழ்கும்

சொழும்பு, செவ்வாய் தெதுறு ஓயா நீர்ப்பாசனத் திட்டம் செயற்படத் தொடங்கும் பொழுது குடுஞுகர் மாவட்டத்திலுள்ள நாற்பத்திரண்டு கிராமங்கள் நீரில் மூழ்கடிக்கப்படும் இதனால் சுமார் 600 குடும்பங்கள் இப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்படும்.

33 ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசனம் ஏற்படுத்தவதற்கான இத்திட்டத்தின்கீழ் மத்துகோடி குளம் செலுழிக்கப்படும் என்று தெரிகின்றது.

இதன்கீழ் 3394 ஏக்கர் தனியார் நிலங்களும், 627 ஏக்கர் வனத்திலங்களும், 2384 ஏக்கர் தென்னை நிலமும் 327 ஏக்கர் சேனை நிலமும் கொண்டுவரப்படும். சுமார் ஒருகோடி ரூபாய் நஷ்டஈடு வழங்குவதன் மூலம் இந்த நிலம் விலை கொடுத்து வாங்கப்படும் என்று தெரிகின்றது. 42 கிராமங்களில் ஏழு முற்றாகவே மூழ்கடிக்கப்படும், மற்றவை பகுதியாக நீரில் அமிழ்ந்து போகக்கூடும்.

இரத்தினபுரிப் பகுதியில் பெருவெள்ளம்

இரத்தினபுரி, செவ் இரத்தினபுரியில் தொடர்ந்து பெய்யும் கடும் மழையின் காரணமாக பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இரத்தினபுரி நகரின் ஒரு பகுதி நீரில் மூழ்கிப்போய் இருக்கின்றது. இரத்தினபுரி பஸ்நிலையம் வெள்ளத்தில் அமிழ்ந்துகிடக்கின்றது. இரத்தினபுரி வழியாகப் பாயும் களுகங்கையில் நீர் மட்டம் உயர்ந்துகொண்டே இருக்கின்றது.

ஏராளமான மக்கள் வீடு மனை இழந்துள்ளனர்.

ரானுவத்தினரும் கடற்படையினரும் பொலிஸ் சமூகசேவைகள் இலாகாவின் அனுசரணையுடன் மீட்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். கடற்படையின் இரு கலங்கள் இப் பகுதிக்கு கொண்டுவரப் பட்டுள்ளன. பெல்மதுல்ல, கிரிபெத்கொட பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

'இந்த அமைப்பினால் எப்படி சோஷலிஸத்தை அமைப்பது?'

மாவிட்டபுரம், செவ்

"இன்றுள்ள அரசியல் அமைப்புத் திட்டங்களை மாற்றி புதிய அரசியல் அமைப்புத் திட்டங்களை கொண்டுவருவதற்கு காரணம் சோஷலிசப் பாதையில் நாட்டை இட்டுச் செல்வதுதான் என்று அரசு தெரிவிக்கிறது. ஒரே இனம் ஒரே மொழி ஒரே மதம் ஆகிய வற்றைப் பிரகடனம் செய்யும் புதிய அரசியல் அமைப்பினால் எப்படி சோஷலிசப் பாதையை அமைக்க முடியும்."

இவ்வாறு உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் தெல்லிப்பழையில் நடந்த தமிழரசுக் கட்சியின் எழுச்சிமாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார்.

காங்கேசன்துறை எம் பி திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

சோஷலிசத்தை அமைப்பதற்கு சோல்பரி அரசியல் திட்டத்தில் 29-ம் ஷரத்து தடையாக இருக்கிறது என்று 1970-ம் ஆண்டுக்கு முன் தொடக்கம் கூறி வருகிறார்கள். இந்த ஷரத்தில் பயன் சோஷலிஸத்துக்கு முரண் தெரியக்கூடியது.

தனிமனித சமய சுதந்திரங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. இந்த 29-ம் ஷரத்து இன்று நடைமுறையில் உள்ள சோல்பரி அரசியல் அமைப்பு தமிழினத்துக்குப் பாதுகாப்பு அளிக்கும் என நாம் கருதவில்லை எனது கட்சிதான் முதல் முதல் சோல்பரித் திட்டத்தை எதிர்த்தது.

தனி மனிதனுடைய சிறுபான்மை இனத்தினுடைய சிறுபான்மை மதத்தினுடைய உரிமைகளை ஓரளவாவது பாதுகாக்கும் ஷரத்துத் தான் இந்த 29-ம் ஷரத்து இதனை மாற்றி வேறொரு அரசமதமென்றும் முதன்மதமாக வளர்வதற்கு உரிய மதமென்றும் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. சாதாரண சட்டமாக இருந்த சிங்கள மொழிச் சட்டத்தை அரசியல் அமைப்பில் சேர்த்துப் பாதுகாப்புத் தேடியுள்ளார்கள்.

எந்தச் சோஷலிச நாடிலாவது இப்படி மதச் சார்புடைய, மதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த அரசியல் அமைப்பு இருக்கிறதா? அரசியல் அமைப்பு மூலம் சோஷலிஸ சமூகத்தை உருவாக்கவேண்டுமானால் இனங்களின் பாதுகாப்பில்தான் தங்கியுள்ளது என்பதைச் சோவியத் ரஷ்யா எடுத்துக் காட்டியுள்ளது. அங்கு மக்கள் சமய என்றும் தேசிய இனங்களின் சமய என்றும் இரு சமயங்கள் உண்டு. எந்த ஒரு சட்டமும் இரு சமயங்களிலும் நிறைவேற்றப்படவேண்டும். மிகச் சிறுபான்மையான சமூக இனத்திற்கும் சம பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சிறுபான்மை இனத்தின் பாதுகாப்புக்காகவே இவ்வமைப்பு உள்ளது. ஒவ்வொரு இனமும் இடுபத்தைந்து உறுப்பினர்களை அனுப்பி அதாவது எவ்வளவு பாதுகாப்பு உள்ளதாக இருக்கும். இதனால் ஓர் இனத்திற்கு மாறாக மற்ற இனங்கள் இயற்றமுடியாது. இதே நிலை இங்கும் ஏன் உருவாகமுடியாது?"

திரு. சோ. சேனாதிராசா உரையாற்றினார்.

சஞ்சிகையா சமச்சடங்கு

ஹைதராபாத் மே. 9

இந்திராகாந்தியின் கட்சியின் தலைவரும் இந்திய ஆட்சிமன்ற உறுப்பினரும் ஆந்திரப்பிரதேச முன்னாள் முதலமைச்சருமான சஞ்சீவையாவின் சமச்சடங்குகள் இன்று நன்பகல் நடைபெற்றன.

முன்மாதிரி

உடுப்பிட்டி, செவ். புலோலிக் கிராமசபை தனது சொந்த முயற்சியில் ஆதன இறைமதிப்புச் செய்ததால் கிராமசபை இறைமதிப்பாளருக்குச் செலுத்த வேண்டிய 12,000 ரூபாவை மீதப்படுத்தியுள்ளதாம்.

கொள்கை எதுவாகிலும்

எல்லா நாடுகளோடும் நட்புறவு கொள்வோம்

சொழும்பு, செவ். அற்ற நாடுகளின் கொள்கைகள் எதுவாய் இருந்தபோதிலும் சகல நாடுகளோடும் நெருங்கிய நட்புறவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டுமென அரசாங்கம் விரும்புவதாகத்தெரிகின்றது.

வெளி நாடுகளிலுள்ள இலங்கை ராஜதந்திரிகளும், வெளிநாட்டமைச்சும் இந்த விஷயத்தில் ஒருமித்த கருத்துக்கொண்டுள்ளதாகத்தெரிகின்றது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதுவர்களின் கூட்டத்தில் இதுபற்றி ஆலோசிக்கப்பட்டதாக. கூட்டுச்சேரா கொள்கையை உறுதியாகக் கடைப்பிடிப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அரசோலையை இலங்கையில் வெளிநாட்டுக்கொள்கையில் பெரியமாற்றம் எதுவும் இல்லையென்று தெரிகின்றது.

இலங்கையின் கூட்டுச்சேராக்கொள்கை கடந்த வருட பயங்கரவாத இயக்கத்திற்போது கொள்கை வேறுபாடுள்ள பல நாடுகளிலிருந்தும்கூடத்தங்கள் கிடைக்கப்பெற்றதாகவிருந்ததான தெரிகின்றது தூதுவர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாகத்தெரிகின்றது.

இந்துமாக்கடல் பிரதேசத்தை அமைதிப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்துவது சம்பந்தமாகவும், இப்பகுதியை அணு ஆயுத சோதனைகளிலிருந்து விடுவிப்பதற்காகவும் வெளிநாடுகளில் பிரசாரம் செய்வதன் மூலம் இக்கொள்கையை வலுப்படுத்தப் பூர்வாங்க வேண்டுமென தூதுவர்களுக்கு அறிவுறுத்தப்படிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

இலங்கைக்கு இந்த விஷயத்தில் அதிக ஆர்வமுண்டு கிடையாதென்ற வாக்கில் வெளிநாட்டு பத்திரிகை செய்திகளின் காரணமாக எழுந்துள்ள தப்பபிப்பிராயங்களைப் போக்கும்படியும் தூதுவர்கள் கோரப்பட்டுள்ளனர்.

ஒன்றேகால் லட்சம் உதவி

சோகிடை, செவ்வாய் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மக்களுக்கு உடனடி நிவாரணமளிக்குமுகமாக சமூகசேவை இலாகா ஒன்றேகால்லட்சம் ரூபாய் உதவி வழங்கியுள்ளது. இரத்தினபுரிப் பகுதியில் 25,000 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர், இவர்கள்பாடசாலைகள் கட்டடங்களிலும் கோயில் தேவாலயக் கட்டடங்களிலும் தஞ்சம்புகுந்துள்ளனர்.

.....

ஜே.ஆர் 17ம்திகதி திரும்புவார்

கொழும்பு, செவ் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா இம்மாதம் 17 ம் திகதி இலங்கை திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மே 2 ம் திகதி அவர் பிரிட்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார். காலஞ்சென்ற ஆட்சிமன்ற சபாநாயகரின் கட்டடத்தில் கலந்து கொண்டார்.

நிக்சனின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தாகும் தங்கள் கிழக்கு ஐரோப்பா பொராட்டம் தொடரும் என கருதியிருக்கின்றனர்.

ஆதிபர் நிக்சனின் உத்தரவை அமெரிக்க ஆதிபர் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக்கட்சியினர் வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர்.

நிக்சனின் நடவடிக்கை மூன்றாவது உலக யுத்தத்துக்கு வழிவகுக்கும் என்று ஒர் ஆலோசகர் தெரிவித்தார். இது சொல்லமுடியாத விளைவுகளை ஏற்படுத்தும் என்று மற்றோர் ஆலோசகர் கூறினார்.

இதேசமயம் நிக்சனின் உத்தரவுகளை எதிர்த்து அமெரிக்காவில் பல இடங்களிலும் இன்று ஆர்ப்பாட்டங்களும் ஆர்வேச வார்வலங்களும் நடைபெற்றன.

விஜயம்

ரத்தாகலாம்

விபத்நாமில் தோன்றியுள்ள புதிய சூழ்நிலை காரணமாக ஆதிபர் நிக்சனின் சோவியத் விஜயம் ஒத்திவைக்கப்படலாமென்றும் எடுக்கப்படுகின்றது;

மாதாந்த சீட்டு

ஆரம்பிக்கப்படுகிறது

ஆரம்பிக்கும் திகதி: 15-5-75

சீட்டுப் பணம் ரூபா 1000

மாதாந்த சீட்டுப் பணம் ரூபா 50

சீட்டு முடிவு: 15-5-77

சீட்டு எடுக்கும் முறை: குலுக்கல்

சீட்டு எடுக்கும் நாள்: ஒவ்வொரு மாதமும் 15 திகதி

சீட்டு எடுக்கும் இடம்: 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50

சீட்டு எடுக்கும் நேரம்: காலை 10 மண

மணிவாக்கு

சிறிய விளக்கு அதிக தொலைவுக்குத் தன் ஒளியைப் பரவுவதுபோல, நற்செயல் சிறியதாயினும் பலருக்கு அது ஒளியாயிருக்கும்.

— ஷேக்ஸ்பியர்

ஈழநாடு

Eela Nadu National Tamil Daily
Telegrams: "ELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பரிதாபி வருஷம் சித்திரை மாதம் 28-ந் திகதி (10-5-72)

இலங்கைக் குடியரசு

1972-ம் ஆண்டு மே மாதம் 22-ந் திகதி இலங்கையின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான நாள். பல வருடங்கள் அந்நிய ஆட்சியின் கீழிருந்த இலங்கை 1948-ம் ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதி சுதந்திரம் பெற்றது. ஆனாலும் இன்றுவரை அது பிரிட்டிஷ் மாராணியிடமே விசுவாசம் தெரிவிக்கவேண்டியிருந்தது. இதை மாற்றி இலங்கையைத் தன்னாதிக்கமுள்ள சுதந்திரக் குடியரசாக்க வேண்டுமென்ற கோரிக்கை காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் 1956-ம் ஆண்டில் மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிபீடத்துக்கு வந்தவுடனே தொடங்கி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. ஆனாலும் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் தலைமையிலான இப்போதைய ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்திற்தான் இலங்கையைக் குடியரசாக்கும் கனவு நனவாகிறது. புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதென்பது சலபமான வேலையல்ல. பல மொழி பேசும் பல இன மக்களைக் கொண்ட சமூகங்கள் வாழும் இலங்கையைப் போன்றதொரு நாடுடைய அரசியலமைப்பை வகுக்கையில் அவர்களுடைய கோரிக்கைகளை ஆராய்ந்து எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் அரசியல் அமைப்பை உருவாக்குவது மிகக் கடினமான காரியம்.

புதிய குடியரசு புதிய உத்வேகத்துடன் செயல்படவேண்டும். பழைய முறைகள் புதிய இடத்தினர்ந்த பழையபடி நத்தை வேகத்தில் சரி மக்கள் செய்வதாயின் அரசியல் அமைப்புச் சட்டம் நாடினதும் மக்களினதும் பிரச்னைகளைத் தீர்த்திட முடியாதென்பதையே உணர்த்தக் கூடியதாயிருக்கும். அரசியல் என்பது வெறும் அரசியல் அமைப்புத்தான் என்று எடுத்திடக்கூடாது. பொருளாதார அபிவிருத்தியும் வறுமை ஒழிப்பும் நாடெங்கும் இன்றைய மிகப் பெரிய பிரச்னைகளாக இருக்கின்றன. நீண்ட வியாதிகளால் இப்பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. ஒரே சமூகமாக ஒன்று சேர்ந்து நின்றே இவற்றுக்குத் தீர்வுகாண முடியும். கடந்தகால அனுபவங்களைக் கருத்தில் கொண்டு இருபெரும் சமூகங்களுக்கிடையில் வேற்றுமையை உருவாக்கக்கூடிய செயல்களுக்கு இடமளிக்கக் கூடாது

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு இம்மாதம் 25-ந் திகதி முதல் அது செயல்படவும் தொடங்கி விட்டிருக்கிறது. இந்நாட்டின் தமிழ்ச் சமூகத்துக்குப் பிரதிநிதித்துவம் வகித்து வரும் இடுதெடும் தமிழ்க் கட்சிகளும், புதிய அரசியல் அமைப்பில் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லையென்கிற கருத்துத் தெரிவித்துள்ளன. இக்கட்சிகளைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் புதிய அரசியல் அமைப்புக் குறித்து அதிருப்தியும் தெரிவித்துள்ளனர்.

அந்நிய ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை அடைவதற்குப் பெரும்பான்மைச் சமூகத்தினருடன் சேர்ந்து சிறுபான்மைச் சமூகத்தினரும் பல வழிகளிலும் போராடினர். ஆனாலும் சுதந்திரத்திற்பின் தமிழ் மக்கள் திருப்திய படக்கூடிய வகையில் ஒன்றே சொல்ல வேண்டும்.

அரசியல் அமைப்பு நிரந்தரமானதல்ல. மாற்றங்கள் செய்ய முடியாததுமல்ல. நிலைமை மாறி மக்கள் மனமாற்றம் பெறும்பொழுது கட்டங்களும் மாறும். அரசியல் அமைப்பிலும் திருத்தங்கள் ஏற்படும். எனவே அந்த நல்ல நாளை எதிர்பார்த்து சகிப்புத்தன்மை முக்கியம் வாய்ந்த குடியரசுப் பிரஜைகள் வையத்திற் சிறுபான்மையினரும் தங்கள் மனங்களைச் செலுத்தக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள் பூரண சுயராஜ்யம் தோன்ற முடியும்.

"மத பக்தியில்லாதவன் பூரணத்துவமற்றவன்"

மறைந்த தலைவர், செல்வ "கடமையைத் நீர்ப்பதற்கு உணவுபோல, மனிதனின் ஆத்மீகப் பசியைத் தீர்ப்பதற்கு மதம் உதவுகிறது. மதபக்தி இல்லாத மனிதன் வாழ்க்கை பூரணத்துவம் பெறுவதில்லை. ஆகவே நாம் எந்தவிதமான மதமாயினும் மதத்தினை வலியுறுத்தியேதீரவேண்டும்" இவ்வாறு மன ஆரவர் எம். ஏ. பெரேராவர் நேற்று மாலை யதிர் ஆர்ச் அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற புதிய ஆரவர் மன கழுவேற்பு ஞாயப் பிரசங்கத்தில் முதற்பூசை விழாவில் பேசும்போது குறிப்பிட்டார். செல்வ வெனடிக்தன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. எம். எம். ஜே. பேதுரு நாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மன்னார் மே. வி. ஞானப்பிரகாசம், திருமலைக் கல்லூரி பொன்ராஜன், ஆர் ஆனந்தராசா ஆகியோர் பேசினர்.

சந்தேபூஷணம் திருமதி ராஜம் மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியிலும் இடம்பெற்றன.

"'தரப்படுத்துதல்' தமிழர்க்கு நன்மையையே செய்திருக்கிறது"

— கல்வியமைச்சர்

கோண்டாவில், செவ்வாய் 'தமிழ் ஆசிரியர்கள் நுண்கலை பயிற்சி கலாசாலையைப் பெறுவதற்கு வசதிசெய்து கொடுக்க இலங்கையில் இரண்டாவது கலைக்கலாசாலை நல்லூரில் நிறுவப்படும்'.

நாளை யாழ்நகர் செல்லவிருக்கும் கல்விமந்திரி ஆல்ஹாஜ் பதியுதீன் மாமூத் இந்தவேளை வெளியிடுகிறார். இந்தவகை ஒரு கலைக்கலாசாலை சிங்கள மூலம் சிங்கள ஆசிரியருக்குப் போதனையில் பிரமாணம் கடந்தாண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது.

பத்திரிகைக்கு அளித்த பேட்டி மொன்றிலேயே அமைச்சர் நேற்று மேற்படி தகவலை வெளியிட்டார். இப்பேட்டியின்போது அமைச்சர் யாழ்ப்பாண மக்கள் தன்மேல் கொண்டுள்ள பல தப்பெண்ணங்களையும் எடுத்துக்காட்டினார்.

அமைச்சர் தனது யாழ்ப்பாண விஜயத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் கூறியதாவது:

வடக்குக்கு மேற்கொள்ளும் எனது விஜயம் தேசிய ஒற்றுமைக்கு வழி வகுப்பதாக அமையும். ஏனெனில் நான் ஒரு சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவன் மற்றுமொரு பதிப்புவாய்ந்த சிறுபான்மைச் சமூக பிரதேசத்துக்குச் செல்கிறேன்.

பல்கலைக்கழக அனுமதி எனது 'தரப்படுத்தல்' பற்றி நவீன கருத்துக்கள் தமிழர்களிடையே நிலவுகின்றன. தமிழ் மாணவர்களுக்கு தரப்படுத்தல் தீமையைச் செய்யவில்லை. நன்மையையே செய்திருக்கின்றது. மேலும் 17 தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதுபற்றியும் குறைகூறுகிறார்கள். நான் தமிழ் மக்களின் தொண்டைக்குச் சிங்களத்தை தத்தி திணிக்கவில்லை. தமிழ்ப் பெற்றோர்களின் விருப்பத்துக்கிணங்கவே சிங்கள ஆசிரியர்களை அனுப்பியுள்ளேன். மன்னார் மாவட்டப் பெற்றோர்கள் விரும்பியதால் அங்கு 30 சிங்கள ஆசிரியர்களை அனுப்புகிறேன்.

அடுத்து வடக்குக்கு ஒரு பல்கலைக்கழகம்பற்றி கேள்வி எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில் 'இத்திட்டத்தைச் செயல்படுத்த நான் பல்கலைக்கழக மான்ய கமிட்டியின் சிபார்சுக்குக் காத்திருக்கிறேன்' எனக் கூறினார்.

இன்று பஜனை

யாழ்ப்பாணம், புதன் பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகளும் அவரது 80 பேர் கொண்ட குழுவினரும் இன்றுமாலை 6 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் பஜனை நிகழ்த்துவர்.

'நாட்டின் செழிப்புக்கு தெய்வநம்பிக்கை'

வத்தளை, செவ்.

'மக்கள் செழிப்புற்ற நாடு அமையுமாயின் மக்கள் மனதில் தெய்வநம்பிக்கை ஏற்படவேண்டும். தற்போதைய சமூகத்தில் நன்றியுணர்ச்சியும் கருணையும் குறைந்து வருகின்றன'.

கொழும்பு பொலிஸ்டியா சந்தியில் நடைபெற்றகூட்டமொன்றில் உரையாற்றிய கொழும்பு அதிமேற்றிராணியார் வணபிதா எமில்கி ஜே. பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் கடவுள் அருளால் செல்வத்தர்கள் ஆனவர்கள் தங்கள் செல்வத்தை ஏழைகளுக்கு கொடுத்து அவர்களுக்கு உதவவேண்டும். கல்விபெறுவதுபோலவே கல்வி பெறுவதற்கு ஏழைகளுக்கு உதவவேண்டும். உடல் நலம் மிக்கவர்கள் நோயாளிகளைக் கவனிக்கவேண்டும் எனக் கூறினார்.

பொது அறிவுப் போட்டி நடத்த முடிவு

யாழ்ப்பாணம், புதன் குருநகர் ஆரோக்கியநாதர் சனசமூக நிலையம் 15 வயதுக்கும் 19 வயதுக்குமிடைப்பட்டவர்களுக்கிடையே பொதுஅறிவுப் போட்டி யொன்றை நடத்தவிருக்கிறது. போட்டியில் முதலாவதாக வெற்றியடைந்த நிலையத்தினால் வெகுமதி வழங்கப்படும். தொடர்ந்து மூன்றுமாதங்களுக்கொரு தடவை இவ்வித போட்டி நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இச்சனசமூக நிலையம் நடத்திவந்த கிளைமாதம் முடிவடைந்த இரவுப் பாடசாலையை மீண்டும் இம்மாதம் 22-ந் திகதி தொடக்கம் நடத்துவதென்றும் நிலையத்தினால் மாதர் முன்னணியொன்றை அமைப்பதென்றும் எப்பகுதியிலுமிருந்து இம்மாதர்முன்னணியில் அங்கத்தவர் பெறலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

'பயங்கரவாதிகள் என அழைக்கவேண்டாம்'

— பிரதமர்

கோண்டாவில், செவ்வாய் கடந்த வருடம் பயங்கரவாத இயக்கத்தில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு நடுப்புலோலியில் இருப்பவர்களில் ஆறேழு இளைஞர்களும் யுவதிகளும் விரைவில் விடுதலை செய்யப்பட்டு அவர்களது இல்லங்களுக்கு அனுப்பப்பட விருக்கின்றனர். இந்த இளைஞர்களை பயங்கரவாதி என்று கூறவும் கூடாது அவர்களை ஒதுக்கவும் கூடாது'.

கிராமசேவகர் களிடம் பாடசாலைகளிற்கு நடைபெற்ற பரிசளிப்புவிழாவில் உரையாற்றுகையில் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இவ்விழாவில் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "பொருளாதார பற்றாக்குறையும், வேலையற்றோர் பெருக்கமும் காரணமாகும். இவர்களில் பெரும்பான்மையோர் கடந்த தேர்தலின்போது ஐக்கிய முன்னணிக்காக உழைத்தவர்கள். இவர்கள் நாட்டை எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு 24 மணித்தியாலத்திலேயே தீர்வு வேண்டும் என எண்ணினார்கள். ஆனால் இன்றே அவர்களது எதிர்ப்பியக்கமாகும்.

கடந்தகால கல்விமுறையே வேலையில்லாப் பிரச்னைக்கு காரணமாகும். தற்போது எங்கள் அரசாங்கம் புதிய கல்விமுறையைக் கொண்டு வந்துள்ளது. எனவே வருங்காலத்தில் வேலையில்லாப் பிரச்னைக்கு இடமிருக்காது.

உணவைப் பொறுத்தவரையிலும் பிறநாடுகள் தங்கியிருக்காது மிளகாய், வெங்காயத்தைப் பயிரிட்டதுபோல் ஏனைய பொருட்களையும் உற்பத்தி செய்ய வேண்டும்.

இவை யாவற்றுக்கும் அவசியமானது மக்கள் மனதில் நாடிடுப்பற்று ஏற்படவேண்டும் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் இளமையிலேயே இந்தப்பற்றை ஏற்படுத்தி விடுவார்களானால் அவர்கள் எடுக்காவதற்கு நற்பிரஜைகளாவார்கள்.

பரீட்சைமுடிவுகள்

கோண்டாவில், செவ்.

அடுத்த மாதம் நடுப்பகுதியில் 'ஜி. சி. ஈ' சாதாரணம் பரீக்ஷை முடிவுகள் வெளியாகுமென்றும் பரீக்ஷைப் பகுதி ஆணையாளர் திரு. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கைப்பணி, மனையியல் ஆகிய பாடங்களில் செய்கை முறைப் பரீக்ஷை நடைபெற்றதில் ஏற்பட்ட தாமதத்திலேயே இம்மாதம் வெளியாகவிருந்த மேற்படி பரீக்ஷை முடிவுகள் வெளியாகமென்று ஆணையாளர் தெரிவித்தார்.

JAFFNA COLLEGE
UNDERGRADUATE DEPARTMENT

Admission in late May and early June to the following courses:

G. C. E. A. L. — First year and Revision.
G. A. Q. / G. S. Q. — Four term course for 1973 exam - for full time & part time students.
Lond. Institute of Statisticians - Parts I & II.
I. C. W. A. - part I.
Electronics.

Prospectus & Forms obtainable by Forwading P. O. for Re. 1/- and self addressed & stamped long envelope.

Applications close as follows:
(i) For A. L. First Year course - one week release of O. L. results.
(ii) For all other courses - 22nd May.

Vaddukoddai. REGISTRAR.
3951

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் அரசாங்க வாரம் யாழ்ப்பாணம் செல்வேலவிலே பேற்று வீதி 65-ந் இலக்கத்திலுள்ள அலுவலகத்தில் 1972-ம் ஆண்டு மே மாதம் 10-ந் திகதி அச்சிடப்பெறுகிறது.